# ECHO OF HIS CALL

# அழைப்பின் எதிரொலி

Tamil

₹ 10/-

India's National Spiritual Newspaper

ECHO OF HIS CALL 1969-2019 GOLDEN JUBILEE

REACHING NATIONS

Published monthly in ENGLISH, TAMIL, MALAYALAM, TELUGU, HINDI, KANNADA, MARATHI, BENGALI, GUJARATI, ODIYA, ASSAMESE, PUNJABI, NEPALI, URDU, SINHALA & AFRIKAN

Editor : S. SAM SELVA RAJ | 16 Languages | Senior Associate Editor: Dr. SERENA BEVIN

Vol. XXIX | MAY 2024 | No. 05


## பரிசுத்த வேதாகமம்

இப்பகுதியை மனப்பாடம் செய்யவும்

### சங்கீதம் 75:1-9

1. உம்மைத் துதிக்கிறோம். தேவனே உம்மைத் துதிக்கிறோம்; உமது நாமம் சமீபமாயிருக்கிறதென்று உமது அதிசயமான கிரியைகள் அறிவிக்கிறது.
2. நியமிக்கப்பட்ட காலத்திலே யதார்த்தமாய் நியாயந்தீர்ப்பேன்.
3. பூமியானது அதின் எல்லாக் குடிகளோடும் கரைந்து போகிறது; அதின் தூண்களை நான் நிலைநிறுத்துகிறேன். (சேலா)
4. வீம்புக்காரரை நோக்கி, வீம்பு பேசாதேயுங்கள் என்றும்; துன்மார்க்கரை நோக்கி, கொம்பை உயர்த்தாதிருங்கள் என்றும் சொன்னேன்.
5. உங்கள் கொம்பை உயரமாய் உயர்த்தாதிருங்கள்; இறுமாப்புள்ள கழுத்துடையவர்களாய்ப் பேசாதிருங்கள்.
6. கிழக்கிலும், மேற்கிலும் வனாந்தர திசையிலுமிருந்து ஜெயம் வராது.
7. தேவனே நியாயாதிபதி; ஒருவனைத் தாழ்த்தி, ஒருவனை உயர்த்துகிறார்.
8. கலங்கிப் பொங்குகிற மதுபானத்தினால் நிறைந்த பாத்திரம் கர்த்தருடைய கையிலிருக்கிறது. அதிலிருந்து வார்க்கிறார்; பூமியிலுள்ள துன்மார்க்கர் யாவரும் அதின் வண்டல்களை உறிஞ்சிக் குடிப்பார்கள்.
9. நானோ என்றென்றைக்கும் இதை அறிவித்து, யாக்கோபின் தேவனைக் கீர்த்தனம் பண்ணுவேன்.

# நமது ஆண்டவரின் தாயுள்ளம்!



ஒருவனை அவன் தாய் தேற்றுவதுபோல் நான் உங்களைத் தேற்றுவேன் ... - ஏசாயா 66:13.

*Rev.* ஏஞ்சலின் செல்வகுமாரி, *Hon. Editor-in-Chief*



நம்மைப் பரலோக ஆசீர்வாதங்களால் ஆசீர்வதிக்கிற நமது ஆண்டவரும், இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற நாமத்தினால் உங்களை வாழ்த்துகிறோம். இந்த மாதம் ஒரு முக்கியமான மாதமாயிருக்கிறது. உலகெங்குமுள்ள தாய்மார்களை அன்னையர் தின வாழ்த்துக்கள் என்று **அழைப்பின் எதிரொலி** இம்மாதம் வாழ்த்துகிறது. இத்தகைய சிறப்பு தினங்கள் அநேகருக்கு சந்தோஷத்தைக் கொடுத்தாலும், சிலருக்கு துக்க உணர்வுகளைத் தூண்டுவதாகவும் அமைகின்றன. "நான் ஒரு தாய் அல்ல; நான் ஏன் இந்த செய்தியைப் படிக்க வேண்டும் ?" என்று இந்த செய்தியைப் புறக்கணித்து விடாதீர்கள். தங்களுக்குள்ளே தாய்மையின் குணத்தை ஊட்டி வளர்க்கிற ஒவ்வொருவரும் அன்னையர் தினத்தைக் கொண்டாடலாம். நீங்கள் தகப்பனாகவோ, சகோதரனாகவோ, மாமா/சித்தப்பா,/பெரியப்பாவாகவோ, சகோதரியாகவோ அல்லது ஒரு தாயின் பொறுப்புகளை ஏற்றுக் கொண்ட ஒரு அத்தை/ சித்தி/ பெரியம்மாவாகவோ இருக்கலாம். உங்கள் தியாகமான அன்பை நினைத்து அதை மகிழ்ச்சியுடன் கொண்டாடும் நாள்தான் 'அன்னையர் தினம்'.

தொடர்ச்சி 3-ம் பக்கம்.....


அழைப்பின் எதிரொலி!



## கிறிஸ்தவ யூடியூப் சானல்!

போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்களுடன்

நேரடியாக ஜெபிக்க ஓர் நல்வாய்ப்பு!!

5 நிமிடத்தில் தேவ செய்தியும், ஜெபமும்!!

தமிழ், ஆங்கிலம், இந்தி & தெலுங்கு

தினந்தோறும் - காலை 2.00 மணியில் இருந்து

தமிழ் ஞாயிறு ஆராதனை - காலை 8.30 மணிக்கு

* பதிவு செய்யுங்கள் - பிறருக்கும் பகிருங்கள் *

# ECHO OF HIS CALL - (1969-2019 GOLDEN JUBILEE YEAR)

REACHING NATIONS



## உங்கள் அன்பு சகோதரனிடமிருந்து...



### OUR MISSION POLICY

We should expound and teach the contemporary generation the undiluted teachings of the ancient and early Apostles. It is the need of the hour.

HON. EDITOR-IN-CHIEF
Rev. Angeline S. Kumari, M.A., M.Sc., M.Ed.
HON. MANAGING EDITOR
Pastor Alex Samson Sam, B.Th., M.Div.
GENERAL MANAGER
Bro. N. Prakasam, M.A., M.Sc.(C&P), PGDHRM., MBA.
ADMINISTRATION
Sis. Jesy Veena Sam
Adv. K. Puratchivendan, M.Com., C.A., B.L.
Dr. P.E.R. Premchand, M.Sc., M.A., M.Ed., Ph.D.
Dr. C.G.S. Baburao, B.Tech., M.Tech. (DM), Ph.D.
Dr. Rabinder Boaz, M.S. (CMC)
EDITORIAL BOARD
Dr. Serena Bevin, M.A., M.Phil., B.Ed.
Sis. Sajini Cherian
Sis. L. Mariya Anjalin, M.A., M.Sc., B.Ed.
Rev. Dr. K.R. Rajasekaran

EDITOR, PUBLISHER & PRINTER
Pastor S. SAM SELVA RAJ
Echo of His Call Printers
10, Mohammed Abdullah 2nd Street,
Chepauk, Chennai- 600 005, India.
Phone : (+ 91- 44) 2852 8282, 2852 9293, 2854 7766
Cell : (+91) 98410 71852, 98412 71858
95661 31858
E.MAIL
sam@echoofhiscall.org
biblecor@yahoo.co.in
WEBSITES
www.echoofhiscall.org
www.stpaulsmatriculation.com
YOUTUBE CHANNEL
Echo of His Call

நீதிமான்களுடைய இரட்சிப்பு கர்த்தரால் வரும்;
இக்கட்டுக்காலத்தில் அவரே அவர்கள் அடைக்கலம்.
சங்கீதம் 37:39

கர்த்தருக்குள் மிகவும் பிரியமானவர்களே,

**நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக;** – 1 பேதுரு 1:3.

உங்கள் ஜெபங்கள் மற்றும் எல்லா ஒத்தாசைகளுக்கும் நன்றி உடையவர்களாயிருக்கிறோம். உங்களை தேவன் ஆசீர்வதிப்பார். உங்கள் தாராள மனப்பான்மை மற்றும் கர்த்தரின் பணிக்கான அர்பணிப்புக்காக உங்களை கர்த்தர் ஆசீர்வதிப்பாராக!

நீங்கள் அறிந்தபடி கடந்த ஏப்ரல் 3–வது வாரத்திலிருந்து தொடர்ந்து நடைபெற்ற நமது **வேனிற்கால சிறுவர் வேதாகமப் பள்ளிகளை** கர்த்தர் வெகுவாய் ஆசீர்வதித்தார். சென்னையில் சேப்பாக்கம், வேளச்சேரி, பாலாஜி நகர், சந்தோஷபுரம் முதலிய இடங்களில் உள்ள நம் சபைகளிலும் இதர இடங்களிலும் நூற்றுக்கணக்கான பிள்ளைகளை தேவ வசனங்களைத் திட்டமிடப்பட்டப் பாடங்கள் மூலம் கற்றுக் கொண்டனர். உழைத்த மற்றும் உதவிய ஊழியர்களைக் கர்த்தர் ஆசீர்வதிப்பார்.

போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்களின் சுயசரிதையை புத்தக வடிவில் முடிப்பதற்கான நிறைவுக் கட்டத்தில் இருக்கிறோம். நமது போதகரின் ஊழியத்தின் மூலம்



**நமது போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்களின் சுயசரிதைக்கான குழு**

நீங்கள் பெற்ற நன்மைகளை 10 வரிகளில் சாட்சியாக எழுதி, உங்கள் புகைப்படத்தையும் அனுப்பினால், சுயசரிதையில் சேர்ப்பதற்கு உதவியாக இருக்கும்.

இந்த மாதம் நாம் மீண்டும் மிகவும் வேகமாக செயல்பட வேண்டும். நமது **நெகேமியா வேதாகமக் கல்லூரி** மாணவர்கள் சுமார் 50பேர் தங்கள் படிப்பை முடித்து, பட்டம் பெற்று தங்களுக்கு நியமிக்கப்பட்ட தூரமான, கஷ்டமான இடங்களுக்குச் சென்றுத் தங்கள் தேவ ஊழியங்களை ஆரம்பிக்க உதவ வேண்டும். ஜுன் மாதம் 1–ம் தேதி இவர்களுக்கான **பட்டமளிப்பு விழா** நடைபெறும். ஜுன் 3–ம் தேதி நமது **நெகேமியா வேதாகமக் கல்லூரியின்** புதிய மாணவர்களுக்கான வகுப்புகள் ஆரம்பிக்கப்படும்.

நமது **நெகேமியா வேதாகமக் கல்லூரிக்கு** நல்ல தரமான தமிழ் மற்றும் இந்தி மொழி மாணவர்கள் வந்து சேர ஜெபியுங்கள். எடுத்துக் கொள்ளுகிற முயற்சிகள் வெற்றி அடைய தயவுகூர்ந்து ஜெபியுங்கள். அதுபோல் நமது கிராம உயர்நிலைப்பள்ளி **St. பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளிக்கும்** தரமான மாணவர்களும், ஆசிரியர்களும் கிடைக்க

ஜெபியுங்கள்.

ஏராளமான தடைகளையும் கஷ்டங்களையும், தேவைகளையும், நெருக்கடிகளையும் நாங்கள் மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. ஏராளம் சவால்கள் எங்கள்முன் நிற்கின்றன. கஷ்டமான பாதையில் கடந்து செல்லுகிறோம்.

நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம். தேவ கிரு

உங்களோடு இருப்பதாக. ஆமென்.

கிறிஸ்து இயேசுவுக்குள் உங்கள் ஊழியர்கள்,
போதகர் அலக்ஸ் சாம்சன் சாம்
போதகர் எஸ். சாம் செல்வ ராஜ்
(+91) 98410 71858 / 98412 71858, மின்னஞ்சல் : sam@echoofhiscall.org

## உங்கள் கவனத்திற்கு!

*நமது* **அழைப்பின் எதிரொலி ஊழியத்தின்** *5 நிமிட தேவ செய்திகளும், ஜெபங்களும் தினமும் காலை 2.00 மணி முதல் தமிழ், தெலுங்கு, இந்தி, ஆங்கிலம் ஆகிய மொழிகளில்* **Echo of His Call YouTube** *சானலில் ஒளிபரப்பாகிக் கொண்டிருக்கின்றன. இதைப் பார்ப்பதன் மூலம் கர்த்தரின் கிருபையைப் பெறலாம்.*

*மேலும், (+91) 98410 71858 மற்றும் (+91) 98412 71858 ஆகிய என்னுடைய தனிப்பட்ட* (Personal) *இரு செல்போன் எண்களையும் தங்கள் செல்போன்களில் பதிவு செய்து கொள்ளுங்கள்.*

**– போதகர் எஸ். சாம் செல்வ ராஜ்**

... 1-ம் பக்கத் தொடர்ச்சி

## தேவனின் தாயன்பு!

நிபந்தனையற்ற தியாகமான அன்பை தியானிக்கும்போது, நமது இரட்சிப்பிற்காகத் தமது ஜீவனை சிலுவையிலே தாமாக ஒப்புக் கொடுத்த ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் அன்பை நான் எண்ணிப் பார்த்தேன். நாம் வாழ்வதற்காக தமது வாழ்க்கையை ஒப்புக் கொடுத்த அந்த சுயநலமில்லாத கிரியை, ஒரு அசாதாரண அன்பை எடுத்துக் காட்டுகிறது. தேவன் நம்மை வழிநடத்துகிறார், பாதுகாக்கிறார், கண்டித்து உணர்த்துகிறார் என்று ஒரு தகப்பனைப் போன்ற குணாதிசயம் உடையவராய் அவரை நாம் புரிந்து கொள்கிறோம். இருப்பினும் ஒரு தாயின் குணங்களும் அவரிடத்தில் இருப்பதை வேத வசனங்கள் பல சம்பவங்களில் வெளிப்படுத்திக் காட்டுகின்றன.



ஏசாயா **66:13** – 'தேற்றும் தாயாக' தேவனை வெளிப்படுத்துகிறது.

மத்தேயு **23:37**– தேவனது அன்பை ஒரு தியாகமான நிபந்தனையற்ற தாயின் அன்பிற்கு ஒப்புமைப்படுத்தி காட்டுகிறது.

தமது ஜனத்தை ஒழுக்கத்திற்கு உறுதியுடன் உட்படுத்துகிறவராகவும், நம்மை சீர் செய்து கற்றுக் கொடுக்கிறவராகவும் தேவனை நாம் ஒரு வகையில் பார்த்தாலும், நம்மை ஊட்டி வளர்க்கும் தாயாக, நிபந்தனையற்ற அன்புடையவராக, நமது குறைகளைக் காணாமல் அவற்றை மறைத்து, நம்மை நீதியாகத் தண்டிக்காமல் நமக்கு எப்போதும் ஆகாரம் கொடுத்து நடத்தும் தாயாகவும் அவரைக் காணலாம்.

இந்த சிறப்பு தினத்திலே, உங்களை ஒரு தாயைப் போல அரவணைத்து, எப்போதும் தனது ஆதரவை அளித்து, ஒரு நல்ல துணையாக, நண்பனாக எல்லா சூழ்நிலைகளிலும், குறிப்பாக தனிமையின் நேரங்களிலே தேவன் இருக்க வேண்டுமென்று ஜெபிக்கிறேன். அவரது பிரசன்னம் எப்போதும் உங்களை ஆற்றி தேற்றி, உங்களுக்காக உத்திரவாதம் எடுத்து, தமது நிபந்தனையற்ற அன்பை உங்கள் பாதையின் ஒவ்வொரு அடியிலும் விளக்கம் செய்யட்டும் என்று வாழ்த்துகிறேன்.

## வேதாகமத்திலுள்ள தாய்மார்கள்!

தாய் உள்ளம் கொண்ட தேவனது குணாதிசயங்களை நான் சிந்தித்தபோது, வேதாகமத்திலுள்ள அநேக தாய்மார்கள், சவாலான சூழ்நிலைகளிலும் தங்களது குடும்பங்களை எவ்வாறு துணிவுடன் நடத்தினார்கள் என்ற யோசனையால் இழுக்கப்பட்டேன். அத்தகையவர்களில் மிகவும் முக்கியமானவர்தான் ஆகார்.

## 1. யார் இந்த ஆகார்?

உங்களில் பலருக்கும் இந்த ஆகாரின் வாழ்க்கையைப் பற்றி தெரிந்திருக்கலாம். அவளைப் பற்றி தெரியாதவர்களுக்கு அவளை அறிமுகப்படுத்த விரும்புகிறேன். அவளுடைய பெயரின் பொருள் 'கைவிடப்பட்டவள்' அல்லது 'தப்பித்து ஓடுபவள்' ஆகும்.

ஆகாரின் வாழ்க்கை, தெளிவில்லாத, அங்கீகாரம் இல்லாத, கேலிக்கூத்தானதாக அமைந்தது. எகிப்து தேசத்திலிருந்து வந்த அடிமைப் பெண் அவள். பிள்ளைகள் இல்லாத ஆபிரகாம் – சாராள் தம்பதியினரின் வீட்டில் அடிமையாகப் பணி செய்து வந்தாள். திடீரென்று அவளைத் தன் கணவனுக்கு மனைவியாக சாராள் கொடுத்து, அவள் மூலம் தனக்கு சந்ததி உருவாகும் என்று எதிர்பார்த்திருந்தாள். ஒரு நொடியில் ஆகாரின் அந்தஸ்து உயர்ந்தது. ஒரு தாழ்மையான வேலைக்காரி என்ற நிலையிலிருந்து, அந்த வீட்டின் இரண்டாவது முக்கிய நபராக மாறினாள். பின்பு அவள் கர்ப்பந்தரித்து, இஸ்மவேல் என்ற மகனைப் பெற்றாள். அவளது அந்தஸ்து மேலும் உயர்ந்தது. தனக்குக் கிடைத்த இந்த முக்கியத்துவத்தினால் அவள் மிகுந்த மகிழ்ச்சியடைந்தாள். அந்த பெருமை அவளது நடத்தையிலும், மற்றவர்களோடு பழகும் விதத்திலும், குறிப்பாக சாராளிடத்தில்

## ஜெபியுங்கள்!

*2024 ஏப்ரல், மே மாதங்களில் நம் ஊழியங்களின் சார்பில் சிறு பிள்ளைகளுக்கான வேனிற்கால விடுமுறைப் பள்ளிகள் இந்தியா முழுவதிலும் நடைபெறும். உங்கள் ஜெபம் தேவை.*

*– ஆசிரியர்*

அவள் நடந்து கொண்ட முறையிலும் வெளிப்பட்டது. சாராள்தான் ஆபிரகாமின் முதல் மனைவி. ஆபிரகாமும் தனது பாரம்பரிய சொத்துக்களுக்கெல்லாம் ஒரு வாரிசு கிடைத்ததற்காக மகிழ்ச்சியாக இருந்தார். ஆனால் தனது சந்ததியைக் குறித்து தேவன் வேறு திட்டம் கொண்டிருந்தார் என்று அவர் அறியவில்லை. மேலும், ஆகார், சாராளைத் தாழ்வாய் நோக்கினதால் அவர்களது உறவில் விரிசல் வரத் தொடங்கியது. சாராளும் ஆகார்மேல் கசந்து கொண்டதால், அந்த கசப்பு உயர்ந்து, அவளைக் கொடுமைப்படுத்தத் தொடங்கினாள்.

சில காலம் கழித்து, தேவனது வாக்குத்தத்தத்தின்படி சாராள் ஒரு மகனைப் பெற்றதும், ஆகார் மூலம் பிறந்த மகன் தனது சுதந்திரத்தில், ஈசாக்கோடு சேர்ந்து பங்குபோட அவள் விரும்பவில்லை. இப்போது சாரா, ஆகாரையும் அவளது குமாரன் இஸ்மவேலையும் நாடுகடத்தி விடும்படி ஆபிரகாமை வற்புறுத்தினாள். அவ்வாறே ஆபிரகாம் ஆகாரை அனுப்பிவிட்டதால், அவள் தன் மகனுடன் வனாந்தரத்தில் அலைந்து திரிந்தாள். அவளது பெயரின் பொருளைப் போலவே, தன் கணவனால் கைவிடப்பட்டு, அவனது வீட்டிலிருந்து தப்பி ஒடுகிறவளாய்க் காணப்பட்டாள். தனிமையில், யாருமற்றவளாய் அலைந்து திரிந்தாள். வேதாகமத்தில் கூறப்பட்டுள்ள, கடுமையான சோதனைகளைச் சகித்த தாய்மாரைப்போல, ஆகாரும் தன் மகனாகிய இஸ்மவேலுடன் வனாந்தரத்தில் ஆதரவில்லாமல் அலைந்தாள்.

## 2. விருப்பமில்லாத பங்கேற்பாளராகிய ஆகார்!

ஆபிரகாமைத் திருமணம் செய்ய ஆகாருக்கு விருப்பமா என்று ஒருவரும் அவளைக் கேட்கவில்லை. அதேபோல ஆபிரகாமை விட்டுப் போவதில் அவளுக்குச் சம்மதமா என்றும் ஒருவரும் அவளைக் கேட்கவில்லை. அவளுடைய தெரிந்தெடுப்புகளை மற்றவர்கள்தான் செய்தார்கள். அவள் ஆணையிடப்பட்டாள்; விருப்பமில்லாத பங்காளராக அவள் மாறினாள். வாழ்க்கையில் விருப்பமில்லாமல் பங்காளராக ஒரு பெண் மாறுவதை நம்மில் எத்தனை பேர் புரிந்து கொண்டிருக்கிறோம்? ஆகாருக்கென்று சுயமாய்ச் செய்ய ஒன்றுமில்லை; தன் நிலையைக் குறித்து வெளியே பேசவும் அனுமதி இல்லை. “என் வாழ்வின் தீர்மானங்களெல்லாம் பிறரால் எடுக்கப்படுகிறது; எனது பங்களிப்பை ஒருவரும் கேட்டறியவில்லை; எனது விருப்பங்கள், ஆசைகளைப் பற்றி ஒருவருக்கும் அக்கறையில்லை. மற்றவர்களுடைய தீர்மானங்களால் உருவாக்கப்பட்ட வாழ்க்கையை நான் வாழ்ந்து வருகிறேன்.” என்று ஒரு ஆணோ அல்லது பெண்ணோ புலம்பலாம்.

அன்பு நண்பர்களே, தேவன்மேல் நம்பிக்கை வைப்போமானால், **சகலமும் நன்மைக்கேதுவாகவே நடக்கிறது** என்று வேதம் (ரோமர் 8:28) உறுதியளிக்கிறது. நிகழ்காலத்திலே அவற்றைப் புரிந்து கொள்ள முடியாமல் இருக்கலாம். தேவன் அனுமதியாமல் எதுவும் நடப்பதில்லை. பயங்கரமான சூழ்நிலைகளையும் நமக்கு சாதகமாக மாற்றித்தர தேவனுக்கு வல்லமையுண்டு. நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து அத்தகைய சர்வ வல்லமையுடையவர். நமக்கு ஏற்றாற்போல் எந்த நிலைமையையும் அவரால் மாற்றி அமைக்க முடியும்.

ஆகாருக்கு நடந்ததைப் போன்ற எந்த காரியத்தையும் நம்மால் புரிந்து கொள்ள முடியாமல் இருக்கலாம். நமக்கென்று தேவன் நியமித்தது என்ன என்று நாம் திகைக்கலாம். ஆனால், நம்மை அவரிடத்தில் ஒப்படைத்து விடுவோமானால், நம்முடைய நன்மைக்கேற்றவாறு அவர் அனைத்தையும் கொண்டு வந்து விடுவார். வேதம் கூறுவதுபோல, **நம் காலங்கள் அவரது கரத்திலிருக்கிறது** (சங்கீதம் 31:15). ஆகாரைப் போல, வனாந்திரப் பாதையில் நீங்கள் பயணித்துக் கொண்டிருந்தால், அமைதியாயிருங்கள். உங்களுக்கு முன் என்ன இருக்கிறது என்றோ உங்கள் எதிர்காலம் எப்படி இருக்குமோ என்று அறியாமலோ நீங்கள் திகைத்துக் கொண்டிருக்கலாம். அனைத்தும் தேவனின் ஆளுகைக்குள்ளாகவே இருக்கிறது என்பதை ஒருபோதும் மறந்து விடாதீர்கள். உங்கள் பாதையை அவர் காட்டுவார். ஆகாரின் உதாரணத்தை மனதில் கொண்டு, தேவனின் கரத்தைப் பிடித்துக் கொண்டு, உங்கள் சித்தத்தை அவர் சித்தத்திற்குள் ஒப்படைத்து சரண் அடைந்து விடுங்கள்.

**ஆபிரகாம் அதிகாலையில் எழுந்து, அப்பத்தையும் ஒரு துருத்தி தண்ணீரையும் எடுத்து, ஆகாருடைய தோளின்மேல் வைத்துப் பிள்ளையையும் ஒப்புக் கொடுத்து, அவளை அனுப்பி விட்டான்; ...** ஆதியாகமம் 21:14. அவளும் ஆபிரகாமை விட்டு பெயர்செபாவின் வனாந்திரத்திலே அலைந்து



**வனாந்திரத்திலே தன் மகனுடன் அலையும் ஆகார்!**

தொடர்ச்சி 6-ம் பக்கம்.....


நெகேமியா வேதாகமக் கல்லூரி, சென்னை.

வேளச்சேரி – முழுநேரம் – இந்தி
சேப்பாக்கம் – மாலை நேரம் – தமிழ்
(திங்கள், செவ்வாய், வியாழன்)

Registered Candidate for Membership
Asia Theological Association (ATA)
உலகத்தின் தலைசிறந்த கிறிஸ்தவ தலைவர்கள் மற்றும் போதகர்களின் நன்மதிப்பைப் பெற்ற 54 வருட அனுபவ ஸ்தாபனம்.

Certificate in Ministry
Diploma in Theology

கல்வித்தகுதி : 10ம் வகுப்பு மற்றும் அதற்கு மேல்
உடனே அணுகவும் !

தொடர்புக்கு : போதகர் எஸ். சாம் செல்வ ராஜ், நெகேமியா வேதாகமக் கல்லூரி,
10, முகமது அப்துல்லா 2–வது தெரு, சேப்பாக்கம், சென்னை – 600 005.
தொலைபேசி: (+91–44) 2852 8282, கைபேசி: (+91) 98410 71852, 95661 31858
மின்னஞ்சல் : sam@echoofhiscall.org /இணையதளம் : www.echoofhiscall.org

GREAT COMMISSION PARTNERS
ECHO OF HIS CALL MINISTRIES
SINCE 1969

# பிரதானக் கட்டளைப் பங்காளர்

## GREAT COMMISSION PARTNERS - PRAISE & PRAYER POINTS

**பகிர்தல்** (Share) (கலாத்தியர் 6:2), **உதவி செய்தல்** (Support) (ரோமர் 12:13) மற்றும் **துரிதப்படுத்துதல்** (Speed up) (II தீமோத்தேயு 1:6)

**துதி மற்றும் ஜெப குறிப்புகள் - 2024 மே 19 முதல் ஜூன் 18 வரை**

(இப்பகுதியைப் பிரித்தெடுத்து, மடித்து, உங்கள் வேதாகமத்தினுள் வைத்து தொடர்ந்து ஜெபியுங்கள்)

## தேவனுக்கு நன்றி செலுத்துங்கள்

மே 19 ⇨ நமது **செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளி, நெகேமியா வேதாகமக்கல்லூரி** மற்றும் **அஞ்சல்வழி வேதாகமக்கல்வி** மூலமாக ஏழை, எளிய மாணவர்கள் பயனடைந்து வருவதற்காக...

மே 20 ⇨ நமது மொழிப்பெயர்ப்பாளர்கள், இணை ஆசிரியர்கள், உதவியாளர்கள் மற்றும் அவர்களுடைய குடும்பத்தினர்களை ஆசீர்வதித்து வருகிறதற்காக...

மே 21 ⇨ நமது தலைமைப் போதகர் அவர்களையும், அவரது குடும்பத்தினரையும் எல்லாவித தீயசக்திகளிலிருந்தும் விலக்கிக் காத்துக் கொண்டதற்காக...

மே 22 ⇨ நமது ஜெபப் பங்காளர்கள், சந்தாதாரப் பங்காளர்கள், விசுவாசப் பங்காளர்கள், ஆயுள் பங்காளர்கள், பிரதானக் கட்டளைப் பங்காளர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினரை ஆசீர்வதித்து வருவதற்காக ...

மே 23 ⇨ நமது **அஞ்சல்வழி இறையியல் கல்வி** மற்றும் **தொலைதொடர்பு வேதாகமக் கல்வி முறைகளின்** வளர்ச்சிகளுக்காக ...

மே 24 ⇨ நமது அனைத்து ஊழியங்களின் தேவைகளையும் அற்புதமாக சந்தித்த கிருபைக்காக...

மே 25 ⇨ நமது தலைமைச் சபை மற்றும் கிளைச் சபை உறுப்பினர்களை ஆசீர்வதித்து வருவதற்காக...

மே 26 ⇨ அனைத்து நாடுகளின் மத்தியிலும் நிலவிவரும் போர் பீதி மற்றும் குழப்பங்கள் மத்தியில் தேவ பாதுகாப்பு கொடுத்து வரும் கிருபைக்காக...

மே 27 ⇨ அரசியல் மற்றும் மத எதிர்ப்புகள் மத்தியிலும் நமது கிறிஸ்தவ ஊழியங்களை வெற்றிகரமாக நடத்தி வரும் கிருபைக்காக ...

மே 28 ⇨ சமூகத்தின் அனைத்து துறைகளிலும் பெண்களை உயர்த்திய கிருபைக்காக...

மே 29 ⇨ நமது **செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளிக்கு** நல்ல கிறிஸ்தவ ஆசிரியர்களும், தலைமை ஆசிரியரும் கிடைக்கச் செய்த கிருபைக்காக...

மே 30 ⇨ நமது தலைமைச் சபை மற்றும் கிளைச் சபை போதகர்களையும், மூத்த தலைவர்களையும் ஆசீர்வதித்து வருவதற்காக...

மே 31 ⇨ நமது **அழைப்பின் எதிரொலி ஊழியங்களின்** பணியாளர்களையும், அவர்களது குடும்பத்தினரையும் பாதுகாத்து வரும் கிருபைக்காக...

ஜூன் 01 ⇨ நமது முழுநேர மற்றும் மாலைநேர **நெகேமியா வேதாகமக்கல்லூரிகளில்** புதிய மாணவர்களைக் கொடுத்த கிருபைக்காக ...

ஜூன் 02 ⇨ நமது சுவிசேஷ அச்சகத்தின் தொடர்பணிகளுக்காகவும், அதற்கு உறுதுணையாக உள்ள திறமைவாய்ந்த பணியாளர்களுக்காகவும் ...

ஜூன் 03 ⇨ **யூடியூப் 5 நிமிட செய்திகள் மற்றும் ஜெபம்** மூலம் அதிகரித்து வரும் Subscribers மற்றும் சாட்சிகளுக்காக...

## தேவனிடத்தில் ஜெபியுங்கள்

ஜூன் 04 ⇨ இளைஞர்கள் மத்தியில் கிரியை செய்யும் வன்முறை மற்றும் கொலைவெறி ஆவிகள் நீக்கப்பட்டு பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட...

ஜூன் 05 ⇨ அனைத்து குடும்பங்களிலும் சமாதானம் நிலவ...

ஜூன் 06 ⇨ உலகத்திலுள்ள கிறிஸ்தவ கல்வி நிறுவனங்கள் நற்கீர்த்தியுடன் என்றென்றும் நிலைத்திருக்க...

ஜூன் 07 ⇨ கிறிஸ்தவர்கள் கர்த்தரின் வேத வசனத்தை பின்பற்றி, கிறிஸ்துவின் சாயலை அடைவதற்காக...

ஜூன் 08 ⇨ நமது ஊழிய விரிவாக்கம் மற்றும் உலகளாவிய சுவிசேஷ பிரபல்யத்திற்காகவும்...

ஜூன் 09 ⇨ நமது தலைமைப் போதகரது சுயசரிதை எழுதும் செயல்பாடு வெற்றிகரமாக நிறைவடைந்திட...

ஜூன் 10 ⇨ கிறிஸ்தவ ஆலயங்களுக்கு எதிரான தீயசக்திகளிடமிருந்து தேவ பாதுகாப்பு கிடைப்பதற்காக...

ஜூன் 11 ⇨ உலக நாடுகளிடையே சமாதானம் நிலவி பொருளாதார மேம்பாடு அடைவதற்காக...

ஜூன் 12 ⇨ சுவிசேஷம் சென்றடையாத பகுதிகள் அனைத்திற்கும் சுவிசேஷத்தைக் கொண்டு சென்றிட வேண்டி...

ஜூன் 13 ⇨ நமது **அழைப்பின் எதிரொலி ஊழியங்களின்** எல்லாவிதமான வழிகள் மற்றும் செயல்பாடுகளின் விஸ்தீரணத்திற்காக ...

ஜூன் 14 ⇨ கிறிஸ்தவ ஸ்தாபனங்களின் ஆசீர்வாதங்களுக்காகவும் அவற்றின் பாதுகாப்பிற்காகவும் ...

ஜூன் 15 ⇨ 2024–25ம் கல்வி ஆண்டிற்கான நமது முழுநேர மற்றும் மாலைநேர **நெகேமியா வேதாகமக் கல்லூரியின்** தகுதியான மாணவர்களின் சேர்க்கைக்காக...

ஜூன் 16 ⇨ 2023–24ம் கல்வி ஆண்டிற்கான நமது **செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளியின்** தகுதியான மாணவர்களின் சேர்க்கைக்காக ..

ஜூன் 17 ⇨ நமது ஜெப ஊழியத்தில் உதவி செய்பவர்களுக்காகவும், நண்பர்கள் மற்றும் நலம் விரும்பிகள் அனைவருக்காகவும் ...

ஜூன் 18 ⇨ ஆண்டவரது இராஜ்யம் பூமியில் நிலைப்பட மேலும் கூடுதலான தரிசனங்களை நம்மிடத்தில் அருளவேண்டி ...

... 4-ம் பக்கத் தொடர்ச்சி

திரிந்தாள். ஆபிரகாம் மிகுந்த சீமானாய் இருந்தபோதும், கொஞ்சம் அப்பமும், ஒரு துருத்தி தண்ணீரும் மட்டும் அவளிடம் கொடுத்தது ஆச்சரியமாகத்தான் இருக்கிறது. அவர் இன்னும் தாராளமாய்க் கொடுத்திருக்கலாம் என்றுதான் எண்ணத் தோன்றுகிறது. அவளுக்கு துணையாய் சில வேலைக்காரர்களையும் தாராளமான உணவு போன்றவைகளையும் அவர் கொடுத்திருக்கலாம். ஆனால் அவர் அவ்வாறு செய்யவில்லை. ஒருவேளை, ஆகார் தேவனே தன்னைப் போஷிப்பவர் என்று தன் அனுபவத்தில் உணர்ந்து கொள்ள வேண்டும் என்று ஆபிரகாம் நினைத்திருக்கலாம். அவரது நோக்கம் என்ன என்று தெளிவாய் வெளிப்படுத்தப்படவில்லை.

கைவிடப்பட்டவளாய், தனிமையில் அந்த வனாந்திரத்தில் தன் மகனை வளர்க்கும் பயங்கரமான பணியை அவள் மேற்கொள்ள வேண்டியிருந்தது. எந்தவித பொருளாதார உதவியோ, தான் சாய்ந்து கொள்ள ஒரு குடும்பமோ இல்லாமல் அளவற்ற கடினமான வாழ்க்கையை அவள் வாழ்ந்தாள். ஏசாயா 54:5 இவ்வாறு கூறுகிறது: **உன் சிருஷ்டிகரே உன் நாயகர்; சேனைகளின் கர்த்தர் என்பது அவருடைய நாமம், இஸ்ரவேலின் பரிசுத்தர் உன் மீட்பர் ...** இத்தகைய பாதையில் நடக்கின்ற பெண்களுக்கு, தேவனே அவர்களது கணவரும், போஷிப்பவருமாயிருந்து, ஆறுதலையும் தேறுதலையும் தந்து உற்சாகப்படுத்துகிறவர் என்று வேதாகமம் அவர்களுக்கு உறுதியளிக்கிறது.

## 3 ஆகாரும் அவளது குமாரனும்!

இந்த சோதனை ஆகாருக்கும் அவளது குமாரனுக்கும் மிகுந்த பெலவீனத்தையும் களைப்பையும் கொடுத்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை. இறுதியாக, அந்த சிறுவன் தாகத்தினால் சோர்ந்து மயங்கி விட்டான். விரைவில் அவன் மரணித்து விடுவான் என்று உணர்ந்த ஆகாரால் அவன் மரணத்தைக் காண முடியாமல் இருதயம் நொறுங்குண்டு சத்தமிட்டு அழுதாள். ஆதியாகமம் 21:16 இல் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது. **பிள்ளை சாகிறதை நான் பார்க்க மாட்டேன்...**



மகனுக்காக கதறி அழும் ஆகார்!

தன் மகன் எப்படியாகிலும் உயிரோடு இருக்க வேண்டுமென ஆகார் விரும்பினாள்; கதறினாள். ஆனால் அவளிடத்தில் பெலனில்லை. நீங்கள் மிகவும்நேசித்த ஒன்று உங்கள் கைகளை விட்டு நழுவிப்போவதை நீங்கள் பார்க்க நேரிட்டால், அந்த வேதனை எத்தகையதாயிருக்கும் என்று கற்பனை செய்து பாருங்கள். அப்படிப்பட்ட காரிருள் சூழ்ந்த நேரத்தில்தான் ஆகார், தேவனை நோக்கி உதவிக்காகவும், ஆறுதலுக்காகவும் கதறினாள்.

ஒரு தாயின் அருமையான குணாதிசயங்களை யோசித்துப் பார்க்கும்போது, தேவன் எவ்வாறு தாய்மார்களை அவர்களது பிள்ளைகளுக்கு ஆசீர்வாதத்தின் வாய்க்கால்களாய் உபயோகிக்கிறார் என்று நாம் காண முடிகிறது.

## தன் மகனுக்காக அவனது தாய் ஏறெடுக்கும் ஊக்கமான வேண்டுதல்!

### (அ) தாய் கதறியபோது, அவளது மகனின் உடனடித் தேவையை தேவன் புரிந்து கொண்டார்!

ஆதியாகமம் 21:16 இல், தண்ணீர் தீர்ந்து போனபொழுது, ஆகாரும் அவளது மகனும் பெலனிழந்து, விரக்தியடைந்தார்கள். சோதனையின் உச்சத்தை அடைந்த ஆகார், தன் மகனது மரணத்தைக் காண சகிக்க கூடாமல் அழுதாள். எதிர்காலத்தைக் குறித்த எந்த வழிநடத்துதலோ, நம்பிக்கையோ இல்லாமல் அந்த பாலைவனத்தில் அவர்கள் நடந்தார்கள். தங்களுக்கிருந்த ஆகாரமும் தண்ணீரும் தீர்ந்தவுடன், ஆகாரால் தன் மகனின் மரணத்தைக் காண முடியாமல் தவித்தாள்.

**பிள்ளை சாகிறதை நான் பார்க்க மாட்டேன் என்று, எதிராக அம்பு பாயும் தூரத்திலே போய் உட்கார்ந்து சத்தமிட்டு அழுதாள் ...** – ஆதியாகமம் 21:16.

ஒரு தாய் தேவனை நோக்கி கதறும்போது, அவளது மகனின் வேதனையை தேவன் கவனித்துப் பார்க்கிறார். நமது ஜெபங்கள் மூலமாக, தேவன் ஜெபத்தைக் கேட்பது மட்டுமல்லாமல், நமது கண்ணீரைக் காண்கிறார்; நமது வேதனைகளையும் உணர்த்துகிறார். நமது கண்ணீரின் ஒவ்வொரு துளியும் அவரது துருத்தியில் வைக்கப்பட்டருக்கிறது (சங்கீதம் 56:8). தங்கள் பிள்ளைகளுக்காக தாய்மார் அழுது அவர்களது பிள்ளைகளுக்காகப் பரிந்து பேசும்போது, அவர்களது தேவைகளை தேவன் சந்திக்கிறார். "தேவன் பிள்ளையின் சத்தத்தைக் கேட்டார்" என்று வேதாகமம் கூறினாலும், அவனது தாயின் அழுகையின் சத்தமே தேவனைத் துரிதமாய் செயல்பட வைத்தது. ஆகாரின் சத்தமான அழுகைக்கு மட்டுமன்றி, சிறுவனான இஸ்மவேலின் அமைதியான வேண்டுதலுக்கும் தேவன் பதிலளிக்கிறார்.

இன்று உங்கள் பிள்ளைக்காக ஊக்கமாக ஜெபித்துக் கொண்டிருப்பீர்களானால், எந்த காரணத்துக்கானாலும் சரி, அவரை நோக்கி சத்தமிட்டுக் கூப்பிடுங்கள். நிச்சயமாகவே உங்கள் பிள்ளையின் தேவையை தேவன் சந்திப்பார். சிலுவையில்

தொடர்ச்சி 9-ம் பக்கம்.....

## நெகேமியா வேதாகமக் கல்லூரி

### 2023-2024-க்கான பட்டமளிப்பு விழா

**இடம் : BKN ஹால், வேப்பேரி, சென்னை - 07.**

**நாள் : ஜூன் 1, 2024 சனிக்கிழமை**

**நேரம் : மாலை 5.00 மணி**

சுமார் 50 மாணவர்கள் தங்கள் கல்வியை முடித்து, ஊழியக்களங்களுக்கு அனுப்பப்படுவார்கள்.

2024–2025 ஆண்டுக்கான தமிழ் (மாலை நேரம்) மற்றும் இந்தி (முழு நேரம்) மாணவர்கள் 75 பேர் தேவை. தயவுசெய்து ஜெபியுங்கள். அடுத்தக்கல்வி ஆண்டிற்கான மாணவர் சேர்க்கை நடைபெறுகிறது.

– ஆசிரியர்

## நமது தலைமையக ஊழியங்களுக்காக ஜெபியுங்கள்!

1. ஜெப உதவி – 24 மணி நேரம்
2. அழைப்பின் எதிரொலி – பத்திரிகைகள் (16 மொழிகள்)
   தமிழ், ஆங்கிலம், மலையாளம், தெலுங்கு, இந்தி, கன்னடம், மராத்தி, பெங்காளி, குஜராத்தி, ஒடியா, நேப்பாளி, அஸாமி, பஞ்சாபி, உருது, சிங்களம், ஆப்ரிகான்ஸ்.
3. வேதாகமக் கடித முறைக் கல்வி – தமிழ், ஆங்கிலம், இந்தி
4. அஞ்சல் வழி இறையியல் கல்வி (தமிழ் மற்றும் ஆங்கிலம்)
5. நெகேமியா வேதாகமக் கல்லூரிகள் – (சேப்பாக்கம், வேளச்சேரி & சந்தோஷபுரம்)
6. பிரதானக் கட்டளைப் பங்காளர்கள் (ஊழியர் ஐக்கியம்)
7. பயிற்சி வகுப்புகள் – கருத்தரங்குகள்
8. சுவிசேஷக் கூட்டங்கள்
9. கைப்பிரதி வினியோகம் – தொடர் ஊழியம்
10. சுவிசேஷ அச்சகம் – சுவிசேஷ பிரசுரங்கள்
11. St. பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளி – கிராம ஆங்கிலப் பள்ளி
12. சிறுவர் வேத பாடசாலை (சேப்பாக்கம்) – ஞாயிறு காலை 10.30 மணி
    & (வேளச்சேரி, பாலாஜி நகர் & சந்தோஷபுரம்) மாலை 3.00 மணி
13. அதிகாலை ஆராதனை – ஞாயிறு காலை 5.30 மணி
14. ஆயத்தக் கூட்டம் – ஞாயிறு காலை 8.00 மணி
15. தமிழ் ஆரதனைகள் – ஞாயிறு காலை 8.30 மணி
16. வாலிபர் கூட்டம் – ஞாயிறு காலை 11.00 மணி
17. ஐக்கிய உணவு – ஞாயிறு மதியம் 1.00 மணி
18. இந்தி ஆராதனை – ஞாயிறு மாலை 4.00 மணி
19. தெலுங்கு ஆராதனை – ஞாயிறு மாலை 5.00 மணி
20. ஆங்கிலம் – இந்தி ஆராதனை – ஞாயிறு மாலை 6.00 மணி
21. கருத்து நேரம் – ஞாயிறு இரவு 7.00 மணி
22. பெண்கள் ஆராதனை – புதன் மாலை 5.30 மணி
23. ஆண்கள் ஆராதனை – வெள்ளி இரவு 7.00 மணி
24. சீஷத்துவக் கூட்டம் – சனி மாலை 6.00 மணி
25. வீட்டுக் கூட்டங்கள் – செவ்வாய், வியாழன் மாலை 6.30 மணி
26. விசேஷ திருவிருந்து – பிரதி மாதம் முதல் நாள் காலை 6.00 மணி
27. ஊழியர்கள் கூடுகை – முதல் சனிக்கிழமை மாலை 6.00 மணி
28. பெற்றோர் ஜெபம் – முதல் ஞாயிறு மாலை 4.00 மணி
29. இரவு ஜெபம் – 3–ம் வெள்ளி இரவு 9.30 மணி
30. உபவாச ஜெபம் – இரண்டாம் சனிக்கிழமை காலை 9.30 மணி
31. திருவிருந்து – 2–ம் ஞாயிறு ஆராதனைகள்
32. வாலிபர் / சிறுவருக்கான ஜெபம் – தினமும் இரவு 10.00 மணி (தொலைபேசி மூலம்)
33. பணியாளர் ஜெபம் – தினமும் காலை 9.00 மணி
34. அலுவலகம் – தினமும் காலை 9.00 முதல் இரவு 9.00 வரை (ஞாயிறு தவிர)

# அழைப்பின் எதிரொலி தபால் வழிக் கல்வி

### இந்திய மாணாக்கர்களுக்கு

## I. வேதாகமத் தபால் கல்வி

தபால் மூலம் வேதத்தின் உண்மைகளையும், தமிழ், ஆங்கிலம், இந்தி மொழிகளில் கற்க ஓர் அரிய வாய்ப்பு. வயது வரம்பு இல்லை. கல்வித் தகுதி தேவையில்லை. கட்டாயக் கட்டணம் எதுவும் இல்லை.



"புதுவாழ்வு – உமக்கு" என்ற நல்ல புத்தகத்தையும் பெற்றுக் கொள்ளலாம். இப்புத்தகம் ஆங்கிலம் – 54 பக்கங்கள், இந்தி – 76 பக்கங்கள், தமிழ் – 96 பக்கங்கள் கொண்டது. சான்றிதழ் வழங்கப்படும்.

– ஆசிரியர்

## II. அஞ்சல் வழி இறையியல் கல்வி




ஆழமான ஆவிக்குரிய சத்தியங்களை 149 தொகுப்புகள், ஆங்கிலம் – 537 பக்கங்கள் மற்றும் தமிழ் – 652 பக்கங்கள் கொண்ட 7 புத்தக வடிவில் பெற்று முழுவதும் படித்த பின்னர் ஊழிய சான்றிதழ் பெறமுடியும். இதற்கு மொத்த கட்டணம்

**ரூ.1000/– மட்டுமே.**

மேலும் விவரங்களுக்கு :



**தலைவர், நெகேமியா வேதாகமக் கல்லூரி**
10, முகமது அப்துல்லா 2-வது தெரு, சேப்பாக்கம், சென்னை - 600 005.
தொலைபேசி: (+91-44) 2852 8282, 2852 9293, 2854 7766
கைபேசி: (+91) 98410 71852, 95661 31858
மின்அஞ்சல்: biblecor@yahoo.co.in

# அழைப்பின்எதிரொலி பத்திரிகையை

### இலவசமாய்ப் பெற்றிட ஓர் நல் வாய்ப்பு

உங்கள் / உறவினர் / நண்பர்கள் முகவரி மற்றும் கைபேசி எண்ணை தபால் / கடிதம் / வாட்ஸ் அப் மூலமாக தெளிவாக **அழைப்பின் எதிரொலி** அலுவலகத்திற்கோ, அலுவலக செல்போனுக்கோ அனுப்பினால் உங்களுக்கு / உறவினர்களுக்கு / நண்பர்களுக்கு இலவசமாக **அழைப்பின் எதிரொலி** பத்திரிகை அனுப்பி வைக்கப்படும். தேவனுக்கான இச்சேவை முற்றிலும் இலவசமானது! தேவனின் அருளை பெற வாரீர்!!



# ஆழக்குழியிலிருந்து அரண்மனைக்கு!

# PIT TO PALACE

(போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்களின் வாழ்க்கை அனுபவங்கள்)

வாசிக்கிறவன் சிந்திக்கக்கடவன் (மத்தேயு 24:15)

## நம்மை வழிநடத்தும் இயேசு கிறிஸ்து!

என் மீட்பர் உயிரோடிருக்கிறார் ... - யோபு 19:25

ஆரம்ப நாட்களில் ஊழியப் பாதையில் பல்வேறு நெருக்கங்களையும் பாடுகளையும் கடந்துவர தேவன் என்னை அனுமதித்தார். குறிப்பாக பொருளாதார நெருக்கடி என்னை அதிகமாக வாட்டி வதைத்தது. தங்குவதற்கும், ஊழியத்தை நிலையான ஒரு இடத்தில் நிறுவவும் எனக்கு வாய்ப்பு இல்லாமல் சென்னைப் பட்டணத்தின் பல இடங்களுக்கு அடிக்கடி என் உறைவிடத்தையும், ஊழிய அலுவலகத்தையும் மாற்ற வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

1980–ம் ஆண்டு நான் திடீரென்று நோய் வாய்ப்பட்டேன். பல நாட்களாக கடுமையான ஜீரத்தினாலும், உடல் வலியினாலும் பாதிக்கப்பட்டேன். குறிப்பாக, எனது கழுத்துப் பட்டையில் ஒரு பயங்கரமான வலியில் நான் அதிகமாய் அவதிப்பட்டேன். நான் ஊழியம் செய்த இடம் ஓர் கிறிஸ்தவரல்லாத இடமாகும். அங்கு வாழ்ந்த எல்லோரும் என்னை ஓர் அந்நியனாகக் கருதியதாலும் எனக்குப் போதுமான உதவிகளைச் செய்ய யாரும் இல்லை. அப்போது வியாதியும், தனிமையும், எதிர்ப்பான சூழ்நிலைகளும் என்னை நெருக்கியபடியால், ஓர் நண்பரை அழைத்து, என்னுடன் ஓர் நாள் இரவு தங்கும்படி கேட்டுக்கொண்டேன். அதற்கு முன் என்னிடமிருந்து பல உதவிகளைப் பெற்று அனுபவித்தவராயிருந்தும் அந்த குறிப்பிட்ட கஷ்டமான நிலைமையில் அவர் என்னுடன் தங்க முடியாது என்று சொல்லி என்னைத் தனியாக விட்டுச் சென்றுவிட்டார். நான் அன்று இரவில் மிகவும் அவதிப்பட்டேன்.

மறுநாள் காலையில் சிலராகச் சேர்ந்து என்னை ஓர் அரசாங்க மருத்துவ மனையில் சேர்த்துவிட்டுப் போய்விட்டார்கள். அங்கும் வியாதியின் கொடுமையால் மிகவும் சோர்ந்து போயிருந்தேன். பல நாட்கள் கழித்து, மருத்துவர்கள் எனக்கு ஒரு அறுவை சிகிச்சை செய்ய வேண்டும் என்று தீர்மானம் பண்ணி, எல்லா முன் ஏற்பாடுகளையும் செய்தார்கள். அந்த நாட்களில் நான் என் சூழ்நிலைகளினிமித்தம் அந்த சிகிச்சையை மேற்கொள்ள விருப்பமற்றவனாக, ஆண்டவரிடம் ஊக்கமாக ஜெபம் பண்ணினேன். உலகப்பிரகாரமான பல வசதிகள் இருந்தும், ஊழியத்தினிமித்தமாக நான் பட்டபாடுகளை ஒவ்வொன்றாக ஆண்டவரிடம் விவரித்துச் சொன்னேன். **என் வழிகளை நான் உமக்கு விவரித்துக் காட்டினபோது எனக்குச் செவிகொடுத்தீர்...** – சங்கீதம் 119:26.

மட்டுமன்றி ஒரு இரவு வேளையில் நான் ஜெபிக்கிற வேளையில் ஒரு தெய்வீகத் தொடுதலை உணர்ந்தேன். என் வியாதி சுகமடைந்தது போல் எனக்கு சரீரத்தில் ஒரு விடுதலையை நான் உணர முடிந்தது. அதனை நான் முழுமையாக விசுவாசித்து அடுத்த நாள் காலையில் நான் சம்பந்தப்பட்ட மருத்துவரிடம் சென்று நடந்த சம்பவத்தைக் கூறினேன். அப்போது அவர் என் மேல் மனதுருகி,



**ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் தெய்வீகத் தொடுதல்!**

“ஐயா, சில கிறிஸ்தவர்கள் இப்படித்தான் ஏதாவது சிகிச்சைக்கு ஏற்பாடு செய்யும்போது, இயேசு நாதர் சுகம் தந்தார் என்று சொல்லி விட்டுப் போய்விடுகிறார்கள். நீங்களும் அப்படித்தான் சொல்லுகிறீர்கள்” என்று கூறி என்னை எந்த வித சிகிச்சையும் அளிக்காமல் திருப்பி அனுப்பிவிட்டார்கள். கர்த்தரை நான் எப்படி நம்பினேனோ அப்படியே அவர் எனக்குச் செய்தார்.

கர்த்தர் எனக்குப் பரிபூரண சுகத்தைத் தந்தார். சுமார் 36 ஆண்டுகள் கடந்துவிட்டன. அந்த வியாதி அதற்குப்பின் எனக்கு வந்ததே இல்லை. சில வேளைகளில் பல மணிநேரம் கரடு முரடான சாலைகளிலும் நான் வாகனம் ஓட்ட வேண்டிய நிலை ஏற்பட்டாலும் கூட எனக்கு அந்த கழுத்து வலியோ, முதுகு வலியோ வருவதே கிடையாது. தொடர்ந்து ஒரு நாளைக்கு 20 மணிநேரம் நான் சுவிசேஷ வேலையினிமித்தமாக அலுவலகம் மற்றும் பிரசங்க ஊழியங்கள் செய்கிறேன். ஆனால் சாதாரணமாக நான் களைப்படைவதில்லை. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து எனக்கு அற்புத சுகத்தை அளித்ததுமன்றி, அன்று ஒரு நண்பர்தான் என்னைக் கைவிட்டார். இன்று பல்லாயிரக்கணக்கான நண்பர்களை உலகமனைத்திலும் எனக்கு ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தந்து என்னையும் என் ஊழியத்தையும் ஆசீர்வதித்தார்.

அன்பு நண்பரே, இயேசு கிறிஸ்து ஆண்டவர் மிகவும் வித்தியாசமானவர்; உயர்ந்தவர். அவர் ஒருவர் மாத்திரம் நமக்கு உண்மை நண்பராகவும், ஆண்டவராகவும், எஜமானராகவும் இருப்பாரானால் இருளும், நம்பிக்கையற்றதுமான இந்த உலகத்தில் நம்மை சரியான நேரத்தில் சரியான வழியில் நடத்துவார். நீங்கள் அவரை உங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு அவருக்கு ஊழியம் செய்யுங்கள். உங்களை நிச்சயமாகவே நல்ல பாதுகாப்பான வழியில் நடத்துவார். என்னை இன்று வரை நடத்துகிறார். உங்களையும் அப்படியே நடத்துவார்.

**... நான் வனாந்தரத்திலே வழியையும், அவாந்தர வெளியிலே ஆறுகளையும் உண்டாக்குவேன்** – ஏசாயா 43:19.

*******

... 7–ம் பக்கத் தொடர்ச்சி

மரிந்து உயிரோடு எழுந்து, நம் அனைவருக்கும் வெற்றி தந்த தேவனையே நாடிச் செல்லுங்கள்.

### (ஆ) அந்த தாய் அழுதபோது, தனது மகனுக்காக, அவனது இடத்திலிருந்து கதறிக் கூப்பிட்டாள்!

ஒரு வார்த்தை கூட தன் மகனால் பேசமுடியாத சூழ்நிலையில், பெலனற்ற தன் மகனுக்காக, அவனது இடத்திலிருந்து ஆகார் ஜெபித்தாள். இத்தகைய முக்கியமான நிலையில், பெலனிழந்து, சோர்வடைந்த தன் மகனுக்காக, ஆகார் ஜெபித்த பொழுது, தாயன்பு மேன்மையான நிலைக்குச் சென்றது. மகனோ, முழு பெலனையும் இழந்து, நாவு வறண்ட நிலையில் விரக்தியுடன் காணப்பட்டாள் இருப்பினும், அவனுக்காக, ஆகார் தன் சத்தத்தை உயர்த்தி அழுதாள்.

தாய்மையின் தியாக குணத்திற்கு இது சாட்சியாக அமைந்துள்ளது. நாமும் நமது பிள்ளைகளுக்காக பரிந்து ஜெபிக்க நம்மை ஏவுகிறது. ஒருவேளை உங்களது மகனோ, மகளோ தேவ அன்பை விட்டு விலகியிருக்கலாம். அல்லது சரீரப்பிரகார மாகவோ, மனதளவிலோ குழப்பத்தில் சிக்கித் தவித்துக் கொண்டிருக்கலாம். ஒருவேளை அவர்களுக்கு ஜெபம், விசுவாசம் போன்றவைகள் பழமையான முறைகளாகக் காணப்படாலாம். ஆனால் அவர்களுக்காக நீங்கள் திறப்பின் வாசலில் நின்று ஜெபிக்கலாம். அவ்வாறு திறப்பில் நின்று ஜெபிக்க வேண்டுமானால், அந்த தாயானவள், தன் பிள்ளைகளின் ஆவிக்குரிய, உலகப்பிரகாரமான தேவைகளுக்காக, பிள்ளைகளுக்கு பதிலாக அவளே தேவனைத் தேடி ஊக்கமாக ஜெபிக்க வேண்டும்.

ஆகார் என்ற தாய் ஜெபித்தபோது, தேவன் அதைக் கேட்டு பதிலளித்தார்.

நமது பிள்ளைகளின் நலனுக்காக தேவனைத் தேடுவது நமது புனிதமான கடமை. தாய்மார்களாகிய நாம், நமது பிள்ளைகளுக்காகவும், பேரப்பிள்ளை களுக்காகவும், நமது சத்தத்தை உயர்த்தி தேவனிடத்தில் ஜெபிப்போமா ?

### (இ) ஆகார் என்ற தாய் சத்தமிட்டு அழுது ஜெபித்தபோது, அந்த மகனை ஆசீர்வதித்தது மட்டுமின்றி, தேவனது எதிர்கால திட்டங்களையும் வெளிப்படுத்தினார்.

தாயானவள் அழுது விண்ணப்பித்த போது, அவர்களுக்குத் தண்ணீரை அற்புதமாய் வழங்கியது மட்டுமின்றி, அவளது மகனுக்கு ஜீவனை மீண்டும் வரவைத்தார் தேவன். அவனைப் பிற்காலத்தில் ஒரு வலிமையான நபராக வளரச் செய்து, மிகப்பெரிய எதிர்காலத்தையும் அருள்வதாக வாக்களித்தார். மேலும், அந்த தாயின் ஊக்கமான விண்ணப்பத்தினால், இஸ்மவேலின் எதிர்காலம் எப்படியிருக்கும் என்று அவளுக்கு வெளிப்படுத்தினார்.

**'நீ எழுந்து பிள்ளையை எடுத்து, அவனை உன் கையினால் பிடித்துக் கொண்டு போ, அவனைப் பெரிய ஜாதியாக்குவேன்' என்றார்** ஆதியாகமம் 21:18

தாய்மார்கள் ஜெபிக்கும்பொழுது, அவர்களது பிள்ளைகளின் எதிர்காலத்தைப் பற்றிய தேவ வெளிப்பாடுகள் வெளிப்படும். நம் ஜெபங்களுக்கு பதிலை வேறெங்கும் தேட வேண்டாம்; ஜெபிக்கும் தாய்மாருக்கு அவைகளை தேவன் வெளிப்படுத்துவார். எனவே ஜெபம் என்ற மேலங்கியைத் தாய்மார்கள் தழுவி, பிள்ளைகளுக்காகத் திறப்பின் வாசலில் நின்று ஜெபிப்போமாக !

*******



ஆகாருடன் பேசும் தேவதூதன்!


## தேவை

**சென்னை – அழைப்பின் எதிரொலியின் நெகேமியா வேதாகமக் கல்லூரி**

*** இந்தி மொழி ***

ATA - Registered Candidate for Membership

**DEAN (Residential):**

அனுபவத்துடன் கூடிய இந்தி இறையியலாளர் (Hindi Theologian) M.Div. / M.Th. தகுதியுள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம். தகுதியுள்ள இந்தி மாணவர்களும் தேவை. விண்ணப்பியுங்கள்.

E.mail: sam@echoofhiscall.org
WhatsApp: (+91) 98410 71858


## அன்பான வாசகர்களின் கவனத்திற்கு . . .

### போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்களின் சுயசரிதை

போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்களின் சுயசரிதையை புத்தக வடிவில் முடிப்பதற்கான நிறைவுக் கட்டத்தில் இருக்கிறோம். **நமது போதகரின் ஊழியத்தின் மூலம் நீங்கள் பெற்ற நன்மைகளை 10 வரிகளில் சாட்சியாக எழுதி அனுப்பவும்.** கூடுதலாக தங்கள் புகைப்படத்தை அனுப்பினால் அதனை சுயசரிதை புத்தகத்தில் சேர்த்து வெளியிட உதவியாக இருக்கும்.

- ஆசிரியர்

### வருமான வரி விலக்கு

இந்திய வருமான வரிச்சட்டம் பிரிவு 80G–கீழ் ஏழை, எளியோருக்கு மருத்துவம் மற்றும் சமுதாய முன்னேற்றத்திற்கான உதவி செய்வதற்காக "அழைப்பின் எதிரொலி" அறக்கட்டளைக்குத் தனிநபர் மற்றும் ஸ்தாபனங்கள் தரும் நன்கொடைகள் வருமான வரிச்சட்டப் பிரிவு 80G–யின் கீழ் வரிவிலக்குப் பெறத் தகுதியுடையவை. வருமான வரிக் கணக்குகளுக்கான அலுவலக இரசீது நம் அலுவலகத்திலிருந்து வழங்கப்படும். அப்படிப்பட்ட நன்கொடைகளுக்கான பணவிடைத்தாள்களை (Demand Drafts) "Echo of His Call Educational Trust" என்ற பெயருக்கு எடுத்து அனுப்பும்போது **ஆதார் மற்றும் பான் (PAN) நம்பர்களை தெரியப்படுத்தி வருமானவரி விலக்கு பெறுங்கள்.** மேலும் விபரம் வேண்டுவோர் எங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

| | |
|---|---|
| **Account Name** | **: ECHO OF HIS CALL EDUCATIONAL TRUST** |
| **Account Number** | **: 1023 2923 805** |
| **Bank Name** | **: STATE BANK OF INDIA** |
| **Branch** | **: TRIPLICANE, CHENNAI - 600 005** |
| **IFSC Code** | **: SBIN 0000249** |
| **SWIFT Code** | **: SBI NIN BB 455** |

RNI NO. 67380/93. Postal Regn. No. TN/CH/(C)/197/24-26 WPP NO. TN/PMG(CCR)/WPP-158/24-26

## அழைப்பின் எதிரொலி

**YouTube (யூடியூப்)**

உங்களுக்கு நேரம் கிடைக்கும்போது நமது அழைப்பின் எதிரொலி (ECHO OF HIS CALL) யூடியூப் (YouTube) சேனலைப் பார்த்து Subscribe செய்ய வேண்டுகிறோம். நன்றி!

– ஆசிரியர்

## OUR BANK DETAILS:

### *1. Bank : State Bank of India*

| | | |
|---|---|---|
| Branch | : | **Triplicane, Chennai-5** |
| Name | : | **S. Sam Selva Raj** |
| A/C No. | : | **1023 2934 679** |
| IFSC | : | **SBIN 00 00 249** |

SWIFT CODE : **SBI NIN BB 455**

### *2. Bank : ICICI Bank*

| | | |
|---|---|---|
| Branch | : | **Anna Salai, Chennai-6** |
| Name | : | **Echo of His Call** |
| A/C No. | : | **6038 0502 2319** |
| IFSC | : | **ICIC 000 6038** |

### *3. Bank : State Bank of India*

**(This Account is for Tax Exemption for Indians only )**

| | | |
|---|---|---|
| Branch | : | **Triplicane, Chennai-5** |
| Name | : | **Echo of His Call Educational Trust** |
| A/C No. | : | **1023 2923 805** |
| IFSC | : | **SBIN 00 00 249** |

**Google Pay: 98410 71858**
**PayPal : SAM SELVA RAJ**

*****

E.mail : sam@echoofhiscall.org

## அழைப்பின் எதிரொலி ஊழியங்கள்

**மாதப் பத்திரிகை 16 மொழிகளில், வேதாகமக் கல்லூரிகள், தபால் வழிக் கல்விகள், சபைகளை ஸ்தாபித்தல், கிராம ஆங்கில உயர்நிலைப் பள்ளி, சுவிசேஷ அச்சகம், சுவிசேஷம், கருத்தாய்வுகள், சமூக சேவைகள் மற்றும் ஏனைய செயல்பாடுகள்**

**❊ வருட சந்தா ரூ. 100/–** **❊ ஆயுள் சந்தா ரூ. 2000/–**

☞ **அழைப்பின் எதிரொலி** ஊழியத்தின் பல்வேறு ஊழியங்கள், நமது பங்காளர்களால் அளிக்கப்படும் சுயவிருப்பக் காணிக்கை மற்றும் நன்கொடைகளினால் நடைபெற்று வருகின்றன. தேவன் உங்கள் உள்ளத்தில் அளித்த விருப்பத்தின்படி நமது ஊழியங்களைத் தாங்கும்படி கேட்டுக்கொள்கிறோம். சுவிசேஷம் சென்றடையாத இடங்களில் சுவிசேஷத்தினை கொண்டு சேர்த்திட மற்றும் சபைகள் ஸ்தாபிக்கப்பட உங்கள் உதவி எங்களுக்கு தேவை.

☞ உங்கள் விலாசம் அல்லது மின்னஞ்சல் மாறினால், உங்கள் பழைய விலாசத்தையும் புதிய விலாசத்தையும், புதிய மின்னஞ்சலையும், உங்கள் பதிவு எண்ணையும் உடனே எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். **அழைப்பின் எதிரொலி** பத்திரிகை உங்களுக்குத் தவறாமல் கிடைக்க வேண்டுமானால் எங்களுக்குக் கடிதம் எழுதுங்கள்.

☞ நம் **அழைப்பின் எதிரொலி** பத்திரிகைகள் 16 மொழிகளிலும் நமது இணையதளங்களில் (Websites) வெளியாகின்றன. அவற்றிலிருந்து படித்தும், பதிவிறக்கம் செய்தும் பயன்பெறுங்கள்.

☞ உங்கள் கடிதங்கள், ஜெப விண்ணப்பங்கள், காணிக்கைகள் முதலியவற்றை காசோலை (Cheque), மணிஆர்டர் (M.O.) அல்லது டிமாண்ட் டிராப்ட் (D.D.) **NEFT, PayPal (Sam Selva Raj, sam@echoofhiscall.org) PhonePe (98410 71858), Gpay (98410 71858), Western Union, MoneyGram, etc.** மூலம் **Echo of His Call** என்ற பெயரில் கீழ்க்காணும் விலாசத்திற்கு அனுப்புங்கள். Online மூலமாகவும் அனுப்பலாம்.

☞ உங்கள் E.mail முகவரி மற்றும் செல்போன் / தொலைபேசி எண்களை எங்களுக்கு அனுப்புங்கள். தேவைப்படும்போது **அழைப்பின் எதிரொலி** பத்திரிகையை E.mail மூலம் அனுப்ப உதவியாக இருக்கும்.

**சகோதர, சகோதரிகளே எங்களுக்காக வேண்டிக் கொள்ளுங்கள்.** 1 தெசலோனிக்கேயர் 5:25.

**அழைப்பின் எதிரொலி,**

**10, முகமது அப்துல்லா 2–வது தெரு, சேப்பாக்கம், சென்னை – 600 005.**

தொலைபேசி : (+91 – 44) 2852 8282, 2852 9293, 2854 7766 செல்: (+91) 98410 71852, 95661 31858

**E.mails : sam@echoofhiscall.org / biblecor@yahoo.co.in**

**Websites : www.echoofhiscall.org / www.stpaulsmatriculation.com**

**YOU CAN SEND YOUR DONATION ONLINE ALSO**

**Regd. with the RNI under No. 67380/93**
**Licenced to post without pre-payment**
**Postal Regn. No. TN/CH/(C)/197/24-26**
**Licence No. WPP - TN/PMG(CCR)/WPP-158/2024-26**
**Date of Publication: last week of previous month**
**Date of Posting : 27th & 28th of previous month**
**Posted at "Egmore RMS / 1 Patrika Channel"**
**on 29th APRIL 2024**
**If un-delivered please return to:**
**ECHO OF HIS CALL (TAMIL)**
**P.O. Box No. 2957, Chepauk, Chennai - 600 005, INDIA.**
**Phone: (+91-44) 2852 8282, 2852 9293, 2854 7766**

*JESUS LOVES YOU!*

To

*GOD BLESS YOU!*

Owned and published by **S. Sam Selva Raj** from New No. 8 & 10, Old No.18 & 19, Mohammed Abdullah 2nd Street, Chepauk, Chennai-600 005 and printed by **S. Sam Selva Raj** at **Echo of His Call Printers**, New No. 8 & 10, Old No.18 & 19, Mohammed Abdullah 2nd Street, Chepauk, Chennai-600 005. Editor: **S. Sam Selva Raj.**